# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

Case No : CC.69/2019

Deposition of witness for : PW.2

Name : Amsavalli

Father / Husband name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Time : 12:00 P.M. To 12:15 P.M.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.02.2021

17.02.2021 முதல் விசாரணை

நான் தற்போது தூதூர்மட்டத்தில் குடியிருந்து கூலிவேலை செய்கிறேன். கடந்த 16.11.2018ம் தேதியன்று எனது கணவர் பிரசாத் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருடன் மருத்துவமனை செல்வதற்காக நானும் எனது அக்கா மகன் சுபிக்ஸ் ஆகியோர் நடந்து சென்று கொண்டிருந்தோம். தூதூர்மட்டம் நோக்கி சென்ற 407 வண்டி பின்பக்கமாக திடீரென்று ரிவர்ஸ் வந்ததில் அங்கு ஓரமாக நடந்து வந்துகொண்டிருந்த முத்துலட்சுமி மீது பின்பக்க டயர் ஏறிவிட்டது. நாங்கள் இருந்த இடம் மேடான பகுதி ஆகும். அங்கிருந்து சம்பவத்தை பார்த்தவுடன் அங்கே ஓடிச் சென்றோம். அங்கு முத்துலட்சுமி வண்டியின் முன்பக்க மற்றும் பின்பக்க டயரின் இடையில் இருந்தார். எனது கணவர் முத்துலட்சுமியை தூக்கினார். அதற்குள் வண்டியை ஓட்டிய டிரைவர் ஆஜர் எதிரி வண்டியிலிருந்து இறங்கி ஓடிவந்தார். நானும் எனது கணவரும் முத்துலட்சுமியை கொலக்கம்பை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு முதலுதவி செய்து பலமான காயமேற்பட்டதால் அவரை கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல கூறியதன்பேரில் நானும் எனது கணவரும் அடிபட்ட நபரின் கணவர் முருகன் ஆகியோர் அவரை கோவை கங்கா மருத்துவமனை அருகில் வேறொரு வண்டியில் கொண்டு சென்றோம். அவர் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார். 407 வண்டியின் பதிவெண் டி.என்.43.டி.2368 ஆகும். போலிசார் இதுகுறித்து என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையின் போது சம்பவத்தை நான் மேடான பகுதியிலிருந்து பார்த்ததாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அடிபட்ட முத்துலட்சுமி ரோடின் ஓரமாக நடந்துவந்தார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறியுள்ளேன். வண்டியில் எதிரியுடன் மகாலிங்கம், ஜெயராஜ், ராஜா ஆகியோர் இருந்தனர். முத்துமாரியம்மன் கோவிலுக்கும் சம்பவ இடத்திற்குமிடையே 200 அடி தூரம் இருக்குமா என்றால் அதற்கும் குறைவாக இருக்கும். சம்பவ இடத்திற்கும் முத்துமாரியம்மன் கோவிலுக்கும் இடையே கிரேக்மோர் எஸ்டேட் உள்ளதென்றால் சரிதான். சம்பவ இடத்திற்கருகில் எதிரியின் உரிமையாளர் வீடு உள்ளதென்றால் சரிதான். விபத்து ரோடின் இடதுபக்கம் நடந்தது. ரோடு 12 அடி அகலம் இருக்கும். இறந்துபோன முத்துலட்சுமியின் சகோதரர் மீனாட்சிசுந்தரம் கொலக்கம்பை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்தார். ஆனால் நாங்கள் சென்ற வண்டியில் அவர் வரவில்லை. மீனாட்சிசுந்தரம் கோவைக்கு வந்தாரா என்றால் மாலையில் வந்தார். சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றோமா என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்தோம். நாங்கள் சென்ற பின்னர் தான் மற்ற ஆட்கள் வந்தனர். சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் உள்ளதென்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரி வண்டியை வேகமாக ஓட்டிவந்து இடிக்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முத்துலட்சுமி மொபைலில் பேசிக்கொண்டு விபத்தில் மாட்டிக்கொண்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

/ஒப்பம்/என்.இரமேஷ்

நீதித்துறை நடுவர், குன்னூர்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

Case No : CC.69/2019

Deposition of witness for : PW.3

Name : Murugan

Father / Husband name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :
Time : 12:15 P.M. To 12:20 P.M.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.02.2021
17.02.2021 முதல் விசாரணை

நான் தற்போது தூதூர்மட்டத்தில் குடியிருந்து ரேசன் கடையில் வேலை செய்கிறேன். கடந்த 16.11.2018ம் தேதியன்று அ.சா.2 அம்சவள்ளி என்பவர் எனது மனைவி முத்துலட்சமி என்பவர் விபத்து ஏற்பட்டுள்ளதாக என்னிடம் தகவல் கூறினார். தகவல் கிடைத்ததும் நான் கொலக்கம்பை மருத்துவமனை சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு அவர் இறந்துவிட்டார். 407 வண்டி பின்பக்க டயர் எனது மனைவியின் மீது ஏறி இறங்கியதால் விபத்து ஏற்பட்டதாக என்னிடம் கூறினார்கள். இதுகுறித்து என்னை போலிசார் விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

/ஒப்பம்/என்.இரமேஷ்

நீதித்துறை நடுவர், குன்னூர்